# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,113 — 1960 අප්‍රේල් 23 වැනි සෙනසුරාදා — 23.4.1960**

**12,113 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 23 ந் திகதி சனிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை, 1946

1949 ம் ஆண்டின் 48 ம் இலக்க இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்டத்தின் 6 ம் பிரிவால் திருத்தப்பட்டதற்கிணங்க 1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 9 (1) ம் பிரிவால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, உள்நாட்டலுவல் கிராமாபிவிருத்தி அமைச்சராகிய, மொகமட் காசிம் மொகமட் கலீல் ஆகிய நான்,

(1) இத்துடனிருக்கும் அட்டவணையின் 1 ம் நிரையிற் காட்டப்பட்டுள்ள தேர்தற் றெருகுதிகளுக்கு 2 ம், 3 ம் நிரைகளில் முறையே கூறப் பட்டுள்ள பதிவு உத்தியோகத்தரையும், உதவிப் பதிவு உத்தியோகத்தர்களையும் இதனால் நியமித்து,

(2) இத்துடனிருக்கும் அட்டவணையின் 1 ம் நிரையிற் காட்டப்பட்டுள்ள தேர்தற் றெருகுதிகள் சம்பந்தமாக முன்னே கூறப்பட்டுள்ள பிரிவின் பிரகாரம் இதன்முன் செய்யப்பட்டிருப்பனவும், 1959 ம் ஆண்டு ஆடி (ஜூலை) மாதம் 28 ம் தேதி வெளியான அரசாங்க விசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருப்பனவுமான பதிவு உத்தியோகத்தர், உதவிப் பதிவு உத்தியோகத்தர்கள் ஆகியவர்களின் நியமனங்களை இதனால் நீக்கிவிடுகிறேன்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் தேதி.

எம். சி. எம். கலீல்,
உள்நாட்டலுவல், கிராமாபிவிருத்தி
அமைச்சர்.

**அட்டவணை**

| 1<br>தேர்தற் றெருகுதி | 2<br>பதிவு உத்தியோகத்தர் | 3<br>உதவிப் பதிவு உத்தியோகத்தர்கள் |
|---|---|---|
| இல. 121—பிபிலை ..<br>இல. 129—மொனருகலை | அரசாங்க அதிபர், பரிபாலன மாவட்டம், மொனருகலை | மாவட்ட காணி உத்தியோகத்தர், மொனருகலை கச்சேரி.<br>உதவித் தேர்தல் உத்தியோகத்தர், மொனருகலை மாவட்டம். |


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.